திரு. மீ. கலியாணசுந்தரம் : இது சம்பந்தமாக அரசாங்கத்தின் தெளிவான கொள்கை என்ன என்று அறிய விரும்புகிறேன். பஸ் வண்டி தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருக்க முடியுமே தவிர பஸ் ரூட்டையே சொந்தமாக்கிக் கொள்ளக்கூடாது. பர்மிட் கண்டிஷன்படியே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும். அப்படி இருக்கும்போது பஸ் ரூட்டை சொந்தச் சொத்து போல் விற்று பெருத்த லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்களால் பஸ்ஸை ஓட்ட முடியவில்லை என்றால் அதை அரசாங்கத்திற்குச் சரண்டர் செய்ய வேண்டுமென்று உத்தரவிடுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்திருக்கிறது. இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. பொதுவாக அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது கலெக்டர்களோடு விவாதிக்கப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் உத்தரவாகப் போடுவதற்கில்லை.

* 153 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டிசம்பர் 1965-ல், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் எத்தனை பஸ் ரூட்டுகளுக்கு பர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன ?

(இ) டிசம்பர் 1965-ல் மேற்கண்ட ரூட்டுகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(உ) அந்த விண்ணப்பங்களுள், தள்ளப்பட்டவை எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) During December 1965, permits were granted for 15 bus routes in South Arcot district.

(*b*) 183 applicants put in a total of 435 applications for grant of permits for the 15 bus routes.

(*c*) 420 applications were rejected.

திரு. நா. இராசாங்கம் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் நடந்த பஸ் ரூட் செலக்ஷன் மட்டுமல்ல, 12 ஆண்டுகளாக விருத்தாசலம் தாலுகாவில் கள்ளகொண்டானில் சிற்றம்பலம், தம்புசாமி என்பவர்கள் விண்ணப்பித்தும் 12 ஆண்டுகளாக அது தள்ளப்பட்டு வருகிறது. ஹரிஜனங்களுக்குச் செய்யும் சலுகைகளில் இதையும் ஒன்றாகக் கொண்டு அவர்களை ஊக்குவிப்பது என்றால், இந்த 12 ஆண்டு காலதாமதம் ஆகுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி தனிக்கேள்வி கேட்டால் நிலைமையை விளக்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 15 பஸ் ரூட்கள் என்று சொன்னார்கள். குறிப்பிட்ட எண் அளவு அப்ளிகேஷன் வந்ததாகவும் சொன்னார்கள். அதில் ஆதிதிராவிடர்களில் எத்தனை பேர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனி கேள்வி வேண்டும்.

பெருமுக்கல் அருகில் பஸ் விபத்து

** 154 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 28—1—1966 பகல் மரக்காணத்திலிருந்து திண்டிவனம் நோக்கி வந்துகொண்டிருந்த பிரயாணி பஸ் ஒன்று பெருமுக்கல் ஏரியில் கவிழ்ந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes. On 28th January 1966, a passenger bus proceeding from Marakanam to Tindivanam, dashed against the iron railings on the laked bund of the Perumukkal lake and fell into the lake;

(*b*) The accident was considered to be due to the sudden breakage of the front right side main rod spring at the forward anchor bed of the bus.

திரு. ஆ. தங்கவேலு : இந்த பஸ் கவிழ்ந்ததால் ஆபத்து ஏற்பட்ட பிரயாணிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா ? எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 2,500 ரூபாய் நஷ்ட ஈடு கோரப் பட்டிருக்கிறது. அது முடிவாகவில்லை. இன்ஷூரன்ஸ் கம்பெனி யில் இருந்து பஸ் சொந்தக்காரருக்கு 5,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஏரிக்கரைக்கு மேல் போகிற பஸ் ரோட்டில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த ரோடை வேறுவிதமாகத் திருப்பி விடுவதற்கு வாய்ப்பு வசதியில்லை. அது குறித்து பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

Sub-Inspectors of Police.

* 155 *Q.*—SRI V. SANKARAN : SRI A. THANGAVELU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Police Stations not having Sub-Inspectors to man them, in each of the three Police ranges in the State respectively; and

(*b*) the time expected to take, to provide the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is no Police Station in this State without a Sub-Inspector.

(*b*) Does not arise.